*முக்கிய வார்த்தைகள்:*
*சமுதாயம்*
*தனிநபர்*
*பெருமை*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**28 ஆகஸ்ட் 2026 / 15 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1448**

# இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் பெருமை கொள்ளும் நபராக ஆகுதல்

إِنَّ الْحَمْدَ لِلّهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّلَهُ، وَمَن يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَه إِلاَّاللهُ وَحْدَهُ لاَشَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُه. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيل: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கையாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் விலக்கிய விஷயங்களிலிருந்து தவிர்ந்து

கொள்ளுங்கள். நாம் எப்போதும் அல்லாஹ்வின் கருணையிலும் பாதுகாப்பிலும் நிலைத்திருக்கும் பாக்கியத்தைப் பெறுவோமாக! ஆமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

இதை அறிந்து கொள்ளுங்கள்! இதை நம்புங்கள்! நிச்சயமாக இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள், தனது **சமுதாய மக்களாகிய** நம்மீது, நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு அன்பு செலுத்தினார்கள். ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் தனது இரு கைகளையும் உயர்த்தி: யா அல்லாஹ்! **என் சமுதாய மக்கள்**!, **என் சமுதாய மக்கள்**! என்று கூறி, இவ்வுலகிலும் மறுமையிலும் நமது நிலைமை குறித்துக் கவலைப்பட்டு அழுதார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள், தனது தோழர் அபூபக்ர் [ரலி] அவர்களைப் பார்த்து: அபூபக்ரே! என் சகோதரர்களைச் சந்திக்க நான் எவ்வளவு ஏங்குகிறேன் தெரியுமா? எனக் கேட்டார்கள். அப்போது தோழர்கள்: அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் யாரைப் பற்றி, எந்தத் தோழர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்? எனக் கேட்ட போது, "எனக்குப் பிறகு வரவிருக்கின்ற, என்னை ஒருபோதும் நேருக்கு நேர் சந்தித்திராத, ஆயினும், என் மீது நம்பிக்கைக் கொள்கின்ற எனது **சமுதாய மக்களையே** குறிப்பிடுகிறேன்" என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். அதாவது, நம்மைப் பற்றித் தான் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

நாளை மறுமை நாளில், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் "ஹவ்ளுல் கவ்ஸர்" எனும் நீரூற்றின் அருகே நமக்காகக் காத்திருப்பார்கள்.

அந்த நீரூற்றுக்கு வரும் தனது **சமுதாய மக்களை** அவர்கள் அடையாளம் கண்டு கொள்வார்கள்; துரதிர்ஷ்டவசமாக, அவர்களில் சிலர் அந்த நீரூற்றையும், இறைத்தூதர்[ஸல்] அவர்களையும் நெருங்க விடாமல் தடுக்கப்படுவார்கள்; இதைக் கண்டு ரசூலுல்லாஹ்[ஸல்] அவர்கள்: *"என் தோழர்களே! என் தோழர்களே!"* என்று அழைப்பார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி மற்றும் முஸ்லிம் ரஹ்]

இதனை அறியும் நாம், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள், தனது **சமுதாய மக்கள்** மீது கொண்டுள்ள அன்புக்கும் அக்கறைக்கும் எல்லையே இல்லை என்பதற்கு சாட்சியாக இருப்பது அவசியமாகும்.

சுப்ஹானல்லாஹ் [அல்லாஹ் பரிசுத்தமானவன்; மேன்மையானவன்]. இதுதான், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள், தனது **சமுதாய மக்களாகிய** நம்மீது கொண்டிருந்த மாபெரும் அன்பாகும். எனவே, இன்றைய "குத்பா" பிரசங்கம், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் **பெருமை கொள்ளும்** வகையிலான **தனிநபர்களாக** நாம் ஆக வேண்டுமென நம்மை அழைக்கிறது. இதை நாம் எவ்வாறு செய்வது? அவ்வாறு நாம் எப்படி ஆகுவது? இதற்கான பதில் என்ன? என்பதைத் திருக்குர்ஆனின் "அல்-ஹஷ்ர்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 7-வது வசனத்தில் காணலாம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான்:

وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانتَهُوا

பொருள்: "நம் தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்; இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்"

**எனது சகோதரர்களே!**

இறைத்தூதர்[ஸல்] அவர்களைப் பெருமைப்படுத்துவதற்கும் அவர்களின் **பெருமைக்குரிய நபர்களாக** நாம் ஆகுவதற்கும் அசாதாரணமான சாதனைகள் எதையும் நாம் செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர்கள்[ஸல்] கற்றுக் கொடுத்த மிக எளிய விஷயங்களிலிருந்தே அதனைத் தொடங்கலாம்.

உங்கள் பெற்றோரிடம் அன்பாகப் பழகுங்கள்; அவர்களுடன் தொடர்பில் இருங்கள்; அல்லது அவர்களை அடிக்கடி சந்தியுங்கள். அவர்களுடன் மென்மையாகப் பேசுங்கள்; அவர்கள் வயதாகும் போது அவர்களைப் பராமரிக்கும் விஷயத்தில் பொறுமையுடன் நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் தொழுகைகளை நிலைநாட்டுங்கள்; மற்றவர்களுக்கு ஸலாம் கூறுங்கள்; மற்றவர்களை புன்முறுவல் பூத்த முகத்துடன் சந்தியுங்கள்; நல்ல மற்றும் உண்மையான வார்த்தைகளையேப் பேசுங்கள்; உங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றுங்கள்; நோயாளிகளைச் சந்தித்து, நலம் விசாரித்துக் கொள்ளுங்கள்; தர்மம் செய்யுங்கள்; பசித்தவர்களுக்கு உணவளியுங்கள்; உங்கள் அண்டை வீட்டாருக்கும் நண்பர்களுக்கும் உதவுங்கள்; இதுவே *"ஹத்யுன் நபவீ"* எனப்படும் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் கொண்டு வந்த வாழ்க்கை நெறியும் வழிகாட்டுதலும் ஆகும்.

பொய் சொல்லும் விஷயம் அற்பமானதாக இருந்தாலும் பொய் சொல்ல வேண்டாம்; நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்; நமது சொற்களாலோ, செயல்களாலோ பிறரின் உணர்வுகளைப் புண்படுத்துவதைத் தவிர்க்கவும்; வேடிக்கையாகக் கூட மற்றவர்களை அவமானப்படுத்தாதீர்கள்; உண்மையறியாத வதந்திகளைப் பரப்புவதைத் தவிர்க்கவும்; புறம் பேசுவதையும் மக்களிடையே சண்டையைத் தூண்டுவதையும் தவிர்க்கவும்;

நமக்குக் கிடைக்கும் வெற்றியானது, நம்மை அகங்காரம் கொள்ளச் செய்ய வேண்டாம்; பிறரிடம் காணப்படும் அருள்கள் அகன்று விட வேண்டுமென விரும்ப வேண்டாம்; அவர்கள் மீது பொறாமை கொள்ளாதீர்கள்.

அல்லாஹ் நமக்கு வாழ்க்கையை எளிதாக்குவதற்கான வழிகளை வழங்கியுள்ள போது, மற்றவரின் வாழ்க்கையை கடினமாக்காதீர்கள்; அன்பு சகோதரர்களே! இவையெல்லாம், நாம் நேசித்து மதிக்கும் ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் கொண்டு வந்த *"ஹத்யுன் நபவி"* எனப்படும் இறைத்தூதுவத்துவ வாழ்க்கை நெறியும் வழிகாட்டுதலும் ஆகும்.

இந்த நினைவூட்டல்கள், இறைத்தூதர்[ஸல்] அவர்களைச் சந்திக்கும் உறுதியை நம்மிடம் ஏற்படுத்தட்டும்; நாம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட **தனிநபர்களாகவும்**, அவர்கள் **பெருமை கொள்ளும்** நபர்களாகவும் ஆகுவோமாக!

நாம் நாளை மறுமை நாளில், ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களின் முன் ஒன்று கூடும் போது, அவர்கள் நம்மைக் கண்டு புன்னகைத்து, **"என் சமுதாய மக்களே நான் உங்களைக் குறித்துப் பெருமைப்படுகிறேன்"** என்று கூறும் நிலை நமக்கு ஏற்படட்டும். ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ

العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.